முல்லைத்தீவு கல்விவலயப் பாடசாலை ஆசிரியர்களிடையே வகுப்பறை முகாமைத்துவத் திறன்கள்

பிறேமலதா அமலதாஸ்
vithyaamalathas@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

கல்வியைக் காத்திரமாக வழங்கும் பாடசாலைகளின் இலக்கை அடைந்து கொள்வதற்கு வகுப்பறை முகாமைத்துவத் திறன் விருத்தி அவசியமாகும். மனித பௌதிக வள மேம்பாட்டோடு நிறுவனத்தை சீர் செய்துகொள்வது முகாமைத்துவமாகும். இவ் ஆய்வில் பிரச்சினைகளை இனங்கண்டு பிரச்சினைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிந்து இவற்றிலிருந்து விடுபட்டு எவ்வாறு மேம்பாடடையவைக்கலாம் என்பது குறிக்கோளாக உள்ளது. முல்லைத்தீவு கல்வி வலயத்தில் முகாமைத்துவத் திறன் விருத்திக்காக 35 பாடசாலைகளில் 196 பேர் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டு ஆவணத் தகவல்கள், வினாக்கொத்து, நேர்காணல், குவியமையக் கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் தரவுகள் திரட்டப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கண்டறிதல் களாக அதிபர் ஆசிரியர்களுக்கு பொருத்தமான வழிகாட்டல்கள் போதுமானதாக இல்லை. பொருத்தமான ஆளணிவளம் குறைவாக உள்ளமை, பௌதிக வளம் போதுமானதாக இல்லை, விழிப்புணர்வின்மை என்பன இனங்காணப்பட்டன. இவற்றை நிவர்த்தி செய்து எதிர்கால ஆய்வுவினாக்களுக்காக நிபுணத்துவவிழிப்புணர்வு, பௌதிகவளங்கள், தொடருறு பயிற்சிகள் வேலைப்பகிர்வு, ஆசிரியர் கூட்டங்கள் என்பனவற்றைப் போதுமானளவு மேற்கொள்ள வேண்டும்.

திறவுச்சொற்கள் : வளங்கள், வளக்கிடைப்பனவு, வளப்பயன்பாடு, ஆசிரியமுகாமையாளர், வினைத்திறன், உள அழுத்தம் சிந்தனைப் போக்குகள்.

அறிமுகம்

இலங்கைக் கல்வி முறையின் இறுதி இலக்கை அடைவதற்காக குறிப்பாக ஆளுமையுள்ள நற்பிரைஜைகளை உருவாக்குவதற்கு மாணவர்களைத் தயார்ப் படுத்த வேண்டியது அதிபர் மற்றும் ஆசிரிய முகாமையாளர்களின் கடமையாகும். இதற்கு வகுப்பறை முகாமைத்துவத்தை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவேண்டும். இதற்காக கற்றல், கற்பித்தல் செயற் பாடுகள், இணைப்பாடவிதானச் செயற் பாடுகளில் மாணவர்களின் இடர்பாடுகளை இனங்கண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசியமாகும். இவற்றை சரியான முறை யில் முகாமை செய்வதிலேயே வகுப்பறை முகாமையாளர்களின் வெற்றி தங்கி யுள்ளது. இதற்காக பல நுட்பங்களைப் பயன் படுத்தவேண்டும். இவற்றை மேம்படுத்திக் கொள்வதற்காக இவ் ஆய்வானது அளவறி சார் ஆய்வாக முன்னெடுக்கப்படுகின்றது.

1.1. ஆய்வின் நோக்கம்

- முல்லைத்தீவு கல்வி வலய பாட சாலைகளின் ஆசிரியர்களின் வகுப் பறை முகாமைத்துவத்திறன் விருத்தி நிலையைக் கண்டறிதல்.
- இந்த வகுப்பறை முகாமைத்துவதிறன் விருத்தி நிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் தாக்கத்தை கண்டறிதலும், தீர்வுகளை முன் வைத்தலும்.

1.2ஆய்வு வினாக்கள்

* முல்லைத்தீவு கல்வி வலய பாடசா லைகளின் ஆசிரியர்களிடையே வகுப் பறை முகாமைத்துவத் திறன் விருத்தி நிலை எவ்வாறு உள்ளது?

* முகாமைத்துவத்திறன் விருத்தி நிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் தாக்கம் எவ்வாறு உள்ளது?

* முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களின் முகாமைத்துத்திறன் விருத்தி நிலையை மேம்படுத்துவதற் கான வழிமுறைகள் யாவை?

1.3ஆய்வு முறைகள்

ஆய்வு முறை என்பது கல்வியியல் ஆய்வில் தரவுகளைப் பெறுவதற்கு பயன்படுத்தப் படும் அணுகு முறையாகும். இது விளக்கத்தின் அடிப்படையிலும், குறியீட்டின் அடிப்படையிலும் ஆய்வுக்கு ஆதாரங்களை வழங்குகின்றது. இதன் மூலமாக ஆய்வு தொடர்பான தெளிவுகளையும் எதிர்வு கூறல்களையும் சீர்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும். (Cohen.L, Manion.L and Morrison, 2010). Research metods in Educations (5th ed). London, Routlede. Falmer. என்றவகையில் ஆய்வை வடிவமைக் கும் போதும் ஆய்வு முறைகளைக் கையாளும் போதும் ஆய்வு சார்ந்த அளவுப் பெறுமானங்கள் பற்றியும் பண்புப் பெறு மானங்கள் பற்றியும் தெளிவு கொள்ளல் வேண்டும். புதிய அறிவை பெறுவதற்கான முறையாக்கப்பட்ட முயற்சி என ஆய்வை ரெட்மென் மற்றும் மோறி வரையறை செய்துள்ளனர் Redman & Mory(2023). Systematized effort to gain new knowledge. பண்புப் பெறுமானங்களை எண்ணளவுப் பெறுமானங்களுக்குக் கொண்டு வர முடியுமா என்பது பற்றியும் எண்பெறுமானத் தொகுப்பில் இருந்து பண்பளவு நிலைமை களைக் கண்டறிய முடியுமா என்பது பற்றியும் செயலாற்றல் இங்கு முக்கியம் பெறுகின்றது. இங்கு பண்புரீதியான ஆய்வு (Qualitative Research) அளவறிசார் ஆய்வு (Quantitative Research) ஆகியவற்றையும் பிரயோகிக்கக்கூடிய வகையில் புள்ளி விபரவியல், அளவைநிலை, வரலாற்று முறை, விபரணமுறை, பகுப்பாய்வுமுறை, ஆவணமுறை, ஆகிய ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி முல்லைத்தீவு கல்வி வலய

பாடசாலை வகுப்பு ஆசிரியர்களிடையே வகுப்பறை முகாமைத்துவதிறன் விருத்தியை இனங்காணப் பயன்படுத்தப் படவுள்ளன. இவை விஞ்ஞானஆய்வு அணுகுமுறையில் உய்த்தறிதல், தொகுத்தறிதல் என்ற வகையில் பிரயோகிக்கப்பட வுள்ளன. பிரச்சினைகளை அடையாளங் காணல், கருதுகோள்களைஅமைத்தல், பரீட்சித்தல், சான்றுகளைச் சேகரித்தல், பகுத்தாராய்தல், கருதுகோள்களை பரிசீலித்தல் அல்லது உருவாக்கிய கொள்கைகளைத் திருத்தியமைத்தல், பொதுமைப் படுத்தல் ஆகிய செயன் முறைகளினூடாக ஆய்வு முன்னெடுக்கப்படும். அருள்மொழி, செ.(2008). கல்விஆய்வுமுறைகள். மட்டக்களப்பு எவக்கிறீன் பதிப்பகம். கருதுகோள் சரியானதாயின் சேர்த்துக் கொள்ளப்பட்ட தரவுகளின் குறிப்பிட்ட விடயங்களை வெளிப்படுத்துவதாக இருக்கும் சேகரித்துக் கொண்ட தரவுகள் மூலம் கருதுகோளை ஏற்பதா இல்லையா என்பது முடிவு செய்யப்படும். கருதுகோளைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு தொகுத்தறிநியாயமும், கருதுகோள் ஒன்றை பரிசீலிக்க உய்த்தறி நியாயமும் பயன்படுத்தப்படும். இவ் வகையில் விஞ்ஞான ஆய்வு அணுகு முறைகளினூடாகவே இங்கு பிரயோகிக் கப்படும் ஆய்வுமுறைகள் எடுத்தாளப்படும்.

கருதுகோள்கள் சரியானதாயின் சேர்த்துக் கொள்ளப்பட்ட தரவுகளின் குறிப்பிட்ட விடயங்களை வெளிப்படுத்துவதாக இருக்கும். சேகரித்துக் கொண்ட தரவுகள் மூலம் கருதுகோளை ஏற்பதா இல்லையா என்பது முடிவு செய்யப்படும். கருதுகோளை கட்டியெழுப்புவதன் பொருட்டு தொகுத்தறி நியாயமும் கருதுகோள் ஒன்றைப் பரிசீலிக்க உய்தறிநியாயமும் பயன்படுத் தப்படும். இவ்வகையில் விஞ்ஞான ஆய்வு அணுகு முறைகளினூடாகவே இங்கு பிரயோகிக்கப்படும் ஆய்வு முறைகள் எடுத்தாளப்படும். அமுலாக்கப்படும் முகாமைத்துவத்திறன் விருத்தி நிலையின் உள்ளடக்கத்தையும், பாடசாலை உட் கட்டமைப்பு ஏற்பாடுகளின் தரத்தையும், மற்றும் கற்பித்தல் கற்றல் செயற்பாட்டில் அவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை நிர்ணயிப்பதற்கும், அதிபர் ஆசிரியர்களின் அபிப்பிராயங்களையும் எதிர்பார்ப்புக் களையும் மதிப்பிடும் வகையிலும், மாணவர் தேர்ச்சிகளை கணிப்பிடுவதற்குமான ஆய்வு முறைகளையும், நுட்பங்களையும் இந்த ஆய்வு கொண்டிருக்கும். ஆசிரியர் தேர்ச்சிகளிலும் வகுப்பறையை நிலை மாற்றம் செய்வதில் அவர்களின் தொடக்க ஆற்றல்களிலும் கலைத்திட்ட சீர்திருத்த சாதனங்களைப் பயன்படுத்தி எவ்வாறன பயனுறுதிப்பாட்டைப் பெற்றுள்ளனர், என்பதைப் பரிசீலிக்கும் வகையிலும் பெற்றோர்களின் பங்களிப்புத் தொடர்பான கணிப்பீடுகளை மேற்கொள்ளவும் இவ் ஆய்வுமுறைகள் வழிகாட்டும். Unicef and NIE. (2003).Rapied Need Assessment Survey: Education of children in conflict affected Areas of Srilanka. Maharagama; Author.

இந்த ஆய்வுமுறைகள் மூலம் முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களின் முகாமைத்துவத் திறன் விருத்தி நிலையை மேம்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் முறையாக வெளிப்படுத்தப் படும். இவை தொடர்பான விபரங்களைச் சேகரிக்கவும் மேற்குறித்த ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்படும். முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் யுத்தத்தின் தாக்கங்கள், இடப் பெயர்வுகள் அழிவுகளால் மிக்க பாதிப்புக்களைப் பாடசாலைகளும், ஆசிரியர்களும், மாணவர்களும் பெற்றோர்களும் அனுபவித்துள்ளார்கள். வெளியகத் தொடர்புகள் அற்ற நிலையில்

நீண்டகாலமாக நடைபெற்ற யுத்தத் தாக்கங்கள் அறிவுசார் பலவீனத்தையும் கல்வியில் பலவகையான வெற்றிடங் களையும் ஏற்படுத்தியுள்ளன. இவை பாடசாலை ஆசிரியர்களிடையே வகுப்பறை முகாமைத்துவத் திறன் விருத்தியை ஏற்படுத்துவதில் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தின, என்ற விடயமும் இந்த ஆய்வினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

3.ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு வடிவமைப்பு தொகைநிலை ஆய்வு அம்சங்களையும், பண்பளவு அம்சங் களையும் உள்ளடக்கியது. முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களுக் கிடையே வகுப்பறை முகாமைத்துவத் திறன் விருத்தியை அறிந்து கொள்வதற்கான இந்த ஆய்வில் அதிபர்கள், ஆசிரியர்களின் பல்வகைமை கருத்தில் கொள்ளப்பட்டு தகவல்களைப் பெற படைகொண்ட மாதிரி எடுப்பு முறை பிரயோகிக்கப்படும். மேலும் பாடசாலைகளின் வகைகள், எண்ணிக்கை பிரதேச வேறுபாடுகளுக்கு ஏற்ப எழுமாற்று மாதிரி பயன்படுத்தப்படும். மொத்தத்தில் படை கொண்ட எழுமாற்றுமாதிரி எடுப்பாக இது அமையும். முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலைகள் 35 இந்த ஆய்வுக்கான மாதிரியாகக் கொள்ளப்பட்டன. இந்த மாதிரியில் இருந்து எழுமாற்றுமாதிரியாக, மாதிரி தெரிவு செய்யப்பட்டது. புாடசாலை குடித்தொகைக்கு ஏற்ப மாதிரிப்பருமன் எண்ணிக்கை பின்வருமாறு கணிக்கப் பட்டது.

3.1 மாதிரி எடுத்தல்

பகுப்பாய்தல் ஆய்வுப் பேறுகளை உகந்த அடிப்படையில் பெறுவதற்காக இங்கு பாடசாலைகள் வகை1 AB, 1C, வகை2, வகை3, எனப் பிரிக்கப்பட்டு ஆய்வுக்கு உட் படுத்தப்படுகின்றன. ஏனெனில் பகுப்பாய்வு மேற்கொள்ள இப் பாடசாலை வகைகள் தேவை என்பதனால் பாடசாலைகள் வகைப்படுத்தப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப் படுகின்றன. ஆகவே முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலைகள் 35இல் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

குறித்த தெரிவு செய்யப்பட்ட பாடசாலைக் களங்களில் முதனிலைத் தரவுகள் சேகரிப் பதற்காக பாடசாலை அதிபர்கள், ஆசிரி யர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடமிருந்து வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப் படும். அத்தோடு அங்குள்ள ஆவணங்களை பகுப்பாய்வுக்குட்படுத்தல் மற்றும் நேர் காணல், அவதானிப்புக்கள் மூலமும் குவிமையகலந்துரையாடல்கள் மூலமும் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் களுடனும் பண்பளவு ரீதியான தகவல்களும் பெறப்படும். இதுவும் குறித்த இந்த ஆய்வில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது.

ஆய்வின் முக்கியமான முதனிலைத் தகவல்களைப் பெறுவதன் மூலங்களாக மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் முறைமை சார் படைகொண்ட எழுமாற்று மாதிரியி னூடாக தெரிவுசெய்யப்பட்டன. குறித்த ஒரு பிரச்சினையுடன் தொடர்புடைய குடித் தொகையிலிருந்து குறித்த ஓர் எண்ணிக்கை யானோரைத் தெரிவுசெய்வதால் உண்டாகும் ஆய்வுக்குழு ஆய்வுமாதிரி எனப்படும். ஆய்வின் கவனம் குவியப் பெற்ற குடித்தொகையை சரியாக வரையறை செய்வதிலும், அதன் சகல உறுப்பினர்களையும் அணுகுவதிலும் உள்ள நிலைமையே இவ் ஆய்வின் மாதிரி எடுப்புச் செயற்பாடுகள் முதன்மைப் படுத்தப்பட்டமைக்கான காரணமாகும்.

ஒரு நாட்டின் தேசிய அபிவிருத்தியானது அந்நாட்டின் கல்விக் கொள்கையோடும், அக்கல்வியை வழங்குவோரோடும் அக்கல்வியைப் பெறுபவரோடும் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. இதனால் சமூகத்திற்குப் பாடசாலை மிக அவசிய மாகக் கருதப்பட்டமையினால் பாடசாலைக் கல்வியின் பணி மிகவும் விரிவடைந்தது. பாடசாலைச் செயற்பாடுகளில் உள்ளக நெகிழ்வினை உருவாக்கி பாடசாலைக்கும், சமூகத்திற்கும் இடையில் இருக்கின்ற தொடர்பினை அபிவிருத்தி செய்து தீர்மானங்களை எட்டுகின்ற தன்மையினை வெளிப்படைத் தன்மையுடன் பாடசா லையின் இலக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டு சமூக ஒருமைப்பாடும், நல்லி ணக்கத்தையும், உறுதிசெய்யும் வகையில் மாணவர்களுடைய மென்திறன்களை விருத்திசெய்யும் பொருட்டும் பாடசாலை யினுள் கல்வி பண்புத்தர மேம்பாட்டுடன் பாடசாலை முகாமையாளர் முறையாக வலுவூட்டப்படவேண்டும். கல்வி அமைச்சு. (2004). கல்வியின் மூலதத்துவங்கள் கல்வியற்கல்லூரி வழிகாட்டல் கைநூல். கொழும்பு கல்வி அமைச்சு.

கல்வியின் மூலம் அறிவார்ந்த சமுதாயம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தை நிறைவு படுத்து வதற்காகப் பாடசலைகள் தோற்றம் பெற்றன. இதனால் பாடசாலைகள் பிள்ளைகளுக்கான கல்விச் செயற்பாட்டைத் திட்டமிட்டு சரியாக முகாமை செய்து நடை முறைப்படுத்துவதனூடாக, அறிவுசார்ந்த சமூக உருவாக்கத்தை ஏற்படுத்த முடியும். இதனால் பாடசாலைகளின் கல்வி சார்ந்த முகாமைத்துவப் பணிகள் யாவும் வினைத் திறனாகவும் அமைய வேண்டும். என எதிர் பார்க்கப்படுகின்றது. ஆகவே பாடசாலைக் கல்வியின் முகாமைத்துவச் செயற் பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பாடசாலை ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள், சமூகப் பாடசாலைச் செயற் பாடுகள் தொடர்பான விடயங்களைச் சரியாக முகாமை செய்ய வேண்டும். இதற்கு சகல மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்க வேண்டும். அண்மைக்கால ஆய்வுகள் பல ஆசிரிய ஆளணியினரை பாடசாலை மட்டத்திலான தொழில் சார் ஆசிரிய அபிவிருத்தி (SBPTD - School Based Professtional Teacher Development) மூலமே மேம்படுத்த முடியும் என அழுத்தமாக கூறுகின்றன. வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பான வழிகாட்டல் கைந்நூல். (2018). கொழும்பு கல்வி அமைச்சு.

இதனால் இன்று ஆசிரியர்கள் கற்பித்த லோடு மட்டும் நின்றுவிடாது வகுப்பறை முகாமைாளர்களாக செயற்பட வேண்டும். என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (Teacher Manager) ஆகவே ஆசிரியர்கள் தமது முகாமைத்துவ ஆற்றுகைகளை மீள் சிந்தனை செய்வது தமது மாணவர்களுக்கு பொருத்தமானகற்றல், கற்பித்தல் உத்தி களை இனங்காண உதவுகின்றது. அத்துடன் தமக்கேயுரிய முகாமைத்துவ வாண்மையில் தோன்றுகின்ற பிரச்சினை களை இனங்கண்டு பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்துவதன் ஊடாக பண்புத்தரமுடைய அறிவு சார்ந்த கற்றறிந்த மாணவர்களை உருவாக்க முடிகின்றது.

தமது தொழிலில் திருப்தி ஏற்படும். அதே வேளை வேலையை மகிழ்ச்சியுடன் செய்வதற்கு ஏற்றவகையில் அவர்களது ஆற்றல்கள் விருத்தி செய்யப்படுகின்றன. சுகல மாணவர்களுக்கும் தரமான கல்வி வழங்கப்படலாம்.

4.1 தரவு முன்வைப்பும் தரவுப் பகுப்பாய்வும்

ஆய்வினை மேற்கொண்டு அதிலிருந்து முடிவினைப் பெற்றுக் கொள்வதற்காக தரவுகள் திரட்டப்படுகின்றன. தரவுகள் முதல்தர மூலங்களாகவே இருக்கும். இவற்றைப் பகுப்பாய்வு செய்யும் போது தான் சில வியாக்கியானங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதனால் தரவுப் பகுப்பாய்வுகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. இருப்பினும் பகுப்பாய்வு என்பது சிக்கலான ஒரு விடயமாகும். எந்தவொரு ஆய்வினதும் உண்மைத் தன்மையை செப்பமாக விளங்கிக் கொள்ளத் திரட்டப் பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல் அவசியமாகும். பல்வேறு ஆதாரங்களில் ஆய்வு எதனை சுட்டுகின்றது. என்பது பற்றிய கூற்றுக்களை உருவாக்கும் நிலை தரவுப் பகுப்பாய்வு ஆகும். இக் கூற்றுக்கள் தரவு களிலிருந்து வெளிக்கிளம்பும் கோலங்கள், கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

தரவுப் பகுப்பாய்வானது தரவுகள் எவற்றைச் சுட்டுகின்றன, என அறிந்து அவற்றை விபரித்தலையும், தரவுகளின் இவ்வியல்பு களினூடாக வெளிக்கொணரப்படுவன வற்றிற்கு விளக்கமளித்தலையும் உள்ளடக் கியதாகும். தரவு சேகரித்தலானது கருது கோள்களை உருவாக்குதல், சம்பவங்களை அல்லது விடயங்களை அவதானிப்பதன் மூலம் புதிய விடயங்களைக் கண்டுபிடித்து விளக்கமளித்தல் என்பவற்றுக்கு உதவி செய்கின்றது. ஆய்வு முறைகள் முடி வடைவதற்கு முன்னர் எண்ணற்ற எதிர்வு கூறல்களை பல்வேறு செயற்பாட்டின் மூலம் அவதானிக்கலாம். இக் கோலங்களை பல்வேறுபட்ட உத்திகள், போக்குக்கள் என்பனவற்றினால் விருத்தி செய்யமுடியும். ஆய்வின் பிரதிபலிப்பு, தர்க்கித்தல் ஆய் வின் முக்கிய நோக்கங்களைக் கோடிட்டுக் காட்டுதல், விளங்கிக்கொள்ளல், கற்றல், கற்பித்தல் நிலைமைகள், தொடர்பான தத்துவசிந்தனைகள் என்பவற்றினையும் தரவுசேகரித்தல், தரவுப்பகுப்பாய்வு என்ப வற்றினால் அறிந்துகொள்ளலாம். தரவு முன்வைப்புக்களாக நேர்காணல், குவிவு மையக்கலந்துரையாடல், ஆவணங்களின் தரவுகள், வினாக்கொத்து முறைகள் உள்ள டக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் இந்த இயலானது சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒழுங்கமைத்து, முன்வைத்து பகுப்பாய்வு செய்வதாக உள்ளது.

4.2 அளவறிசார் தரவுகளின் பகுப்பாய்வு

அளவறிசார் தரவுகளின் பகுப்பாய்வுக்கு விவரணப்புள்ளிவிபரவியல், அனுமானப் புள்ளிவிபரவியல் ஆகியன பயன்படுத்தப் படுகின்றன. குறிப்பாக ஆசிரியர் வினாக் கொத்திலுள்ள துலங்கல்கள் கைவர்க்கச் சோதனை மூலம் பகுப்பாய்வு செய்யப் படுகின்றன. பண்புநிலைத்தரவுகள் கருப் பொருளை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. அளவறி சார் தரவுகளின் பகுப்பாய்வுக்கு வினாக் கொத்தில் வழங்கப்பட்ட உருப்படிகளுக்கு விடைத்தெரிவுகளாக உயர்வு, சராசரி, குறைவு என்பன வழங்கப்பட்டு முறையே 3,2,1 ஆகிய புள்ளிகள் வழங்கி ஒவ்வொரு காரணி சார்பாகவும் இடைப்பெறுமானம் கண்டறியப்பட்டது. அடுத்து ஒவ்வொரு காரணியும் பாடசாலை வகையைச் சார்ந்தி ருக்கின்றதா என்பதை பரிசீலிப்பதற்காக கருதுகோள்கள் உருவாக்கப்பட்டு கைவர் க்கச் சோதனை பிரயோகிக்கப்பட்டது.

கருதுகோள்

ஓர் ஆய்வில் சிறந்த கருதுகோளானது தெளிவானதாகவும், திட்டவட்டமான தாகவும், பரிசீலிக்கப்படக் கூடியதாகவும் அமைந்திருக்கும். இது ஆய்வின் பயன்படு

தன்மையினையும், வினைத் திறனையும். உயர்ந்தும். இங்கு ஏதேனுமொரு பொருள் பற்றி மிகக் கவனத்தோடும், விடாமுயற்சி யோடும் நுட்பமாகவும் தேடுவது ஆய் வாகின்றது. இலக்குமணன். M.S(1977). அறிவியல் அறிமுகம். சென்னை் மீனாட்சி புத்தகநிலையம்.

$$X^2 \frac{\sum (fe - fo)^2}{\Sigma Fo}$$

கைவர்க்கச் சூத்திரம்

Ho = அவதானிக்கப்பட்டமீடிறன்

H1 = எதிர்பார்க்கப்பட்டமீடிறன்

X= 0.05 பொருண்மைமட்டத்தில் கருது கோள் பரிசீலிக்கப்பட்டது.

அட்டவணை 01

அதிபர், மேற்பார்வை அதிகாரிகளின் மூலம் முறையான வழிகாட்டல்கள்.

பாடசாலை வகை	உயர்வு	சராசரி	குறைவு	மொத்தம்	இடை
1AB	1	13	3	17	1.88
1 C	2	11	10	23	1.65
Type II	10	38	15	63	1.92
Type III	6	65	22	93	1.83
Total	19	127	50	196	1.84

Ho: ஆசிரியர்களுக்கான முறையான வழி காட்டல்கள் அதிபர், மேற்பார்வை அதி காரிகள் மூலம் கிடைத்தமை பாடசாலை வகையில் தங்கியிருக்கவில்லை.

H1: ஆசிரியர்களுக்கான முறையான வழி காட்டல்கள் அதிபர், மேற்பார்வை அதி காரிகள் மூலம் கிடைத்தமை பாடசாலை வகையில் தங்கியுள்ளது.

$$x^2 = \sum \frac{(Fe - Fo)^2}{\Sigma Fo} = \underline{9.0356}$$

கட்டின்மை அளவு df = (4-1) x (3-1) = 6

95% பொருண்மை மட்டத்தில் கணிக்கப்பட்ட

x^2 பெறுமதி $x^2 = 9.0356 = 12.5916$

95% பொருண்மைமட்டத்தில் X^2 அட்ட வணைப் பெறுமானம் X^2= 12.5916 அதாவது கணித்தறியப்பட்ட X^2 பெறுமானம் அட்ட வணைப் பெறுமானத்தை விடச் சிறியது அதாவது ஆசிரியர்களுக்கான முறையான வழிகாட்டல், அதிபர், மேற்பார்வை அதி காரிகள் மூலம் முறையாகயாகக் கிடைத் தமை. பாடசாலை வகையை சாராதுள்ளது.

அட்டவணை 02

பாடசாலை வகை	உயர்வு	சராசரி	குறைவு	மொத்தம்	இடை
1AB	2	6	9	17	1.59
1 C	3	3	17	23	1.39
Type II	4	16	43	63	1.38
Type III	5	35	53	93	1.48
Total	14	60	122	196	1.45

Ho முகாமைத்திறன் விருத்தி நிலை தொடர் பான கணிப்பீட்டுக் கருவிகள் கிடைத்தமை பாடசாலை வகையில் தங்கியிருக்க வில்லை.

H1 பாடசாலை வகையும் முகாமைத்துவ திறன்விருத்தி நிலை தொடர்பான கணிப்பீ ட்டுக் கருவிகள் கிடைத்தமையும் பாடசாலை வகையில் தங்கியுள்ளது.

$$x^2 = \sum \frac{(Fe - Fo)^2}{\Sigma Fo} = 2.1886$$

கட்டின்மை அளவு = df=(4-1) x (3-1) =6

95% பொருண்மை மட்டத்தில் கணிக்கப் பட்ட x^2 = 2.1886

95% பொருண்மை மட்டத்தில் x^2 அட்டவ ணைப் பெறுமானம் 12.5916, 2.1886<12.5916 கணித்தறியப்பட்ட x^2 பெறுமானம் அட்டவணைப் பெறு மானத்தை விட சிறியது ஆகவே Ho ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அதாவது பாடசாலை வகையும் வழிகாட்டப்பட்ட கணிப்பீட்டுக் கருவிகள் முறையாகப் பின்பற்றியமையும் பாடசாலை வகையை சாராதுள்ளது.

அட்டவணை- 03

ஐந்தாண்டுத்திட்டம், வழிகாட்டி நூல்களைப் பயன்படுத்தியமை.

பாடசாலை வகை	உயர்வு	சராசரி	குறைவு	மொத்தம்	இடை
1AB	1	14	2	17	1.94
1 C	1	15	7	23	1.74
Type II	6	42	15	63	1.85
Type III	6	73	14	93	1.91
Total	14	144	38	196	1.88

Ho வழிகாட்டப்பட்ட ஐந்தாண்டுத்திட்ட வழி காட்டி நூல்களை முறையாக பின்பற்றக் கூடியதாக இருந்தமை.
பாடசாலை வகையில் தங்கியிருக்க வில்லை.
H1 வழிகாட்டப்பட்ட ஐந்தாண்டுத்திட்ட வழி காட்டி நூல்களை முறையாக பின்பற்றக் கூடியதாக இருந்தமை.
பாடசாலை வகையில் தங்கியுள்ளது.

$$x^2 = \sum \frac{(Fe - Fo)^2}{\Sigma Fo} = 5.4575$$

கட்டின்மை அளவு = df=(4-1) x (3-1)=6

95% பொருண்மை மட்டத்தில் கணிக்கப்பட்ட x^2=5.4575

95% பொருண்மை மட்டத்தில் x^2 அட்ட வணைப் பெறுமானம் x^2 = 12.5916 5.4575 < 12.5916

கணித்தறியப்பட்ட x^2 பெறுமானம் அட்டவ ணைப்பெறுமானத்தை விட சிறியது ஆகவே Ho ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அதாவது பாடசாலை வகையும் வழிகாட்டப்பட்ட ஐந் தாண்டுத்திட்ட வழிகாட்டி நூல்களை முறையாக பின்பற்றக் கூடியதாக இருந் தமை பாடசாலை வகையை சாராதுள்ளது.

அட்டவணை - 04

இணைபாடவிதானச் செயற்பாடுகள்.

பாடசாலை வகை	உயர்வு	சராசரி	குறைவு	மொத்தம்	இடை
1AB	3	9	5	17	2.11
1 C	3	15	5	23	2.09
Type II	9	38	17	64	2.10
Type III	11	59	22	92	2.09
Total	26	121	49	196	2.09.

Ho இணைபாடவிதானச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை பாடசாலை வகை யில் தங்கியிருக்கவில்லை.

H1 இணைபாடவிதானச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை பாடசாலை வகை யில் தங்கியுள்ளது.

$$x^2 = \sum \frac{(Fe - Fo)^2}{\Sigma FO} = 1.6805$$

கட்டின்மை அளவு = df=(4-1) x (3-1) =6

95% பொருண்மை மட்டத்தில் கணித்தறியப் பட்ட x^2= 1.6805

95% பொருண்மை மட்டத்தில் x^2 அட்டவ ணைப் பெறுமானம் 12.5916, 1.6805< 12.5916 கணித்தறியப்பட்ட x^2 பெறுமானம் அட்டவணைப் பெறுமானத்தை விட விடச் சிறியது. ஆகவே Ho ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

அதாவது முகாமைத்திறன் விருத்தி நிலை யில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் பாடசாலை வகையில் சாராதுள்ளது.

அட்டவணை - 5

முகாமைத்துவத்திறன் விருத்திக்கான கலைத்திட்ட சாதனங்களின் கிடைப்பனவு.

பாடசாலை வகை	உயர்வு	சராசரி	குறைவு	மொத்தம்	இடை
1AB	0	16	1	17	1.94
1 C	2	16	5	23	1.74
Type II	0	54	9	63	1.86
Type III	5	71	17	93	1.71
Total	7	157	32	196	1.78

Ho முகாமைத்துவத்திறன் விருத்தி நிலை தொடர்பான கலைத்திட்ட சாதனங்களின் கிடைப்பனவு
பாடசாலை வகையில் தங்கியிருக்க வில்லை.

H1 முகாமைத்துவ திறன் விருத்தி நிலை தொடர்பான கலைத்திட்ட சாதனங்களின் கிடைப்பனவு பாடசாலை வகையில் தங்கியுள்ளது.

$$x^2 = \sum \frac{(Fe - Fo)^2}{\Sigma Fo} = 10.51$$

95% பொருண்மை மட்டத்தில் கணிக்கப்பட்ட $x^2 = 10.51$

95% பொருண்மை மட்டத்தில் கணிக்கப் பட்ட x^2 = 10.51

5% பொருண்மை மட்டத்தில் x^2 அட்டவ ணைப் பெறுமானம் x^2 =12.5916,
10.51<12.5916 கணித்தறியப்பட்ட x^2 அட்ட வணைப் பெறுமானத்தை விட சிறியது ஆகவே
Ho ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

அட்டவணை 06

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் கிடைத்தமை.

பாடசாலை வகை	உயர்வு	சராசரி	குறைவு	மொத்தம்	இடை
1AB	0	11	6	17	1.65
1 C	0	12	11	23	1.52
Type II	0	30	32	62	1.48
Type III	0	37	51	88	1.42

Ho ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி கிடைத்தமை பாடசாலைவகையில் தங்கியி ருக்கவில்லை.

H1 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி கிடை த்தமைபாடசாலைவகையில் தங்கியுள்ளது.

$$x^2 = \sum \frac{(Fe - Fo)^2}{\Sigma Fo} = 7.1792$$

கட்டின்மைஅளவுdf=(4-1) x (3-1) =6

95% பொருண்மைமட்டத்தில் கணிக்கப் பட்டx^2= 7.1792

x%அட்டவணைப்பெறுமானம் = 7.815

95% பொருண்மைமட்டத்தில் x^2 அட்டவ ணைப் பெறுமானம் x^2=7.815 பாடசாலை வகையைச் சார்ந்தது.

7.1792 < 7.815 அதாவது கணித்தறியப்பட்ட

x^2 பெறுமானம் அட்டவணைப் பெறுமானத் தை விட சிறியது.

ஆகவே Ho ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அதாவது ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி கிடைத்தமை

பாடசாலை வகையை சாராதுள்ளது.

அட்டவணை - 7

ஆய்வு நூல்கள் கிடைத்தமை

பாடசாலை வகை	உயர்வு	சராசரி	குறைவு	மொத்தம்	இடை
1AB	1	7	9	17	1.52
1 C	2	3	18	23	1.30
Type II	3	18	42	63	1.38
Type III	5	25	63	93	1.37
Total	11	53	132	196	1.38

Ho முகாமைத்துவதிறன் விருத்திநிலை தொடர்பான இடைநிலைக்கல்வி வழிகாட்டி நூல்கள் கிடைத்துள்ளமை.

பாடசாலை வகையில் தங்கியிருக்கவில்லை.

H1 பாடசாலை வகையும் முகாமைத் துவத்திறன் விருத்திநிலை தொடர்பான இடை நிலைக்கல்வி வழிகாட்டி நூல் கிடை த்தமை பாடசாலை வகையில் தங்கியுள்ளது.

$$x^2 = \sum \frac{(Fe - Fo)^2}{\Sigma Fo} = 4.3975$$

கட்டின்மை அளவு (df=4-1)x(3-1)=6

கட்டின்மை அளவு (df=4-1)x(3-1)=6

95% பொருண்மை மட்டத்தில் கணித் தறியப்பட்ட x^2 பெறுமதி 4.3975

95% பொருண்மை மட்டத்தில் x^2 அட்டவ ணைப் பெறுமானம் x^2 12.5916,

4.3975<12.5916 கணித்தறியப்பட்ட x^2 பெறுமானம் அட்டவணைப் பெறுமானத்தை விட சிறியது ஆகவே Ho ஏற்றுக் கொள்ளப் படுகின்றது.

அதாவது முகாமைத்துவ திறன் விருத்தி நிலை தொடர்பான வழிகாட்டிநூல் கிடைத் துள்ளமை பாடசாலை வகையை சாராதுள்ளது.

அட்டவணை - 08

கையேடுகள், கைந்நுல்கள் கிடைத்தமை

பாடசாலை வகை	உயர்வு	சராசரி	குறைவு	மொத்தம்	இடை
1AB	2	6	9	17	1.59
1 C	3	3	17	23	1.39
Type II	4	16	43	63	1.38
Type III	5	35	53	93	1.48
Total	14	60	122	196	1.45

Ho முகாமைத்துவத்திறன் விருத்தி நிலை தொடர்பான கையேடுகள், கைநூல்கள் பாட சாலை வகையில் தங்கியிருக்க வில்லை.

H1 முகாமைத்துவ திறன் விருத்தி நிலை தொடர்பான வழிகாட்டிநூல் கிடைத்தமை பாடசாலை வகையில் தங்கியிருக்க வில்லை.

$$x^2 = \sum \frac{(Fe - Fo)^2}{\Sigma Fo} = 8.1077$$

கட்டின்மை அளவு =df(4-1)x(3-1) =6

95% பொருண்மை மட்டத்தில் கணித்தறியப் பட்ட x^2 பெறுமானம் 8.1077

95% பொருண்மை மட்டத்தில் x^2 அட்ட வணைப் பெறுமானம் x^2= 12.5916, 8.1077 < 12.5916

கணித்தறியப்பட்ட x^2 பெறுமானம் அட்ட வணைப் பெறுமானத்தை விடச் சிறியது ஆகவே Ho ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அட்டவணை - 09

பெற்றோர்களின் விழிப்புணர்வு

பாடசாலை வகை	உயர்வு	சராசரி	குறைவு	மொத்தம்	இடை
1AB	1	10	6	17	1.71
1 C	0	10	13	23	1.43
Type II	0	27	34	61	1.44
Type III	1	43	49	93	1.48
Total	2	90	102	194	1.48

Ho முகாமைத்துவத்திற் விருத்தி தொடர்பாக பெற்றோர் போதிய விழிப்புணர்வு பெற்றிருந்தமையும் பாடசாலை வகையில் தங்கியிருக்கவில்லை.

H1 பாடசாலை வகையும் முகாமைத்துவ திறன்விருத்திநிலை தொடர்பாக பெற்றோர் போதிய விழிப்புணர்வு பெற்றிருந்தமையும் பாடசாலை வகையில் தங்கியுள்ளது.

$$x^2 = \frac{\sum (Fe - Fo)^2}{\Sigma Fo} = 6.5674$$

கட்டின்மை அளவு df= (4-1)x(3-1) =6

95% பொருண்மை மட்டத்தில் கணித்தறியப்பட்ட x^2 =6.5674

95% பொருண்மை மட்டத்தில் x^2 அட்டவணைப் பெறுமானம் 12.5916 6.5674 < 12.5916 கணித்தறியப்பட்ட

x^2 பெறுமானம் அட்டவணைப் பெறுமானத்தை விடச்சிறியது ஆகவே Ho ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

அதாவது முகாமைத்துவத்திறன் விருத்தி நிலையில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் பாடசாலை வகையில் சாராதுள்ளது.

அட்டவணை - 10

முகாமைத்துவத் திறனை பாடசாலை மட்டத்தில் முறையாக அமுலாக்க முடிந்தமை

பாடசாலை வகை	உயர்வு	சராசரி	குறைவு	மொத்தம்	இடை
1AB	2	13	2	17	2.00
1 C	3	17	3	23	2.00
Type II	4	50	9	63	1.92
Type III	6	75	12	93	1.94
Total	15	155	26	196	1.94

Ho முகாமைத்துவத்திறனை பாடசாலை மட்டத்தில் முறையாக அமுலாக்க முடிந்தமை பாடசாலை வகையில் தங்கியிருக்கவில்லை.

H1 முகாமைத்துவத்திறனை பாடசாலை மட்டத்தில் முறையாக அமுலாக்க முடிந்தமை பாடசாலை வகையில் தங்கியுள்ளது.

$$x^2 = \frac{\sum (Fe - Fo)^2}{\Sigma Fo} = 1.7743$$

கட்டின்மை அளவு df= (4-1)x (3-1)=5

95% பொருண்மை மட்டத்தில் கணிக்கப்பட்ட x^2 = 1.1743

95% பொருண்மை மட்டத்தில் x^2 அட்டவணைப் பெறுமானம் 12.5916

1.7743<12.5916 கணிக்கப்பட்ட x^2 பெறுமானம் அட்டடவணைப் பெறுமானத்தை விடச்சிறியது. ஆகவே Ho ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

கலந்துரையாடல்களும் முடிவுகளும்.

முகாமைத்துவத் திறன் விருத்தி நிலைக்காக அதிபர், மேற்பர்வை அதிகாரிகள் மூலமான

முறையான வழிகாட்டல்கள், கணிப்பீட்டுக் கருவிகள் முறையாகப் பின்பற்றியமை, ஐந்தாண்டுத்திட்டம், வழிகாட்டி நூல்கள் பயன்படுத்தியமை, இணைபாடவிதானச் செயற்பாடுகள், கலைத்திட்ட சாதனங்களின் கிடைப்பனவு, ஆசிரியர் அறிவுரைப்பு வழி காட்டிகள் கிடைத்தமை, ஆய்வுநூல்கள், கையேடுகள் கிடைத்தமை, பெற்றோர் களின் விழிப்புணர்வு முகமைத்துவத் திறனை முறையாக அமுலாக்க முடிந்தமை கணித்தறியப்பட்ட X^2 பெறுமானம் அட்ட வணைப் பெறுமானத்தை விட சிறுயதா கையால் Ho ஏற்றுக் கொள்ளப்படும் இவை அனைத்தும் பாடசாலை வகையை சாரா துள்ளது என்பதுடன் இவ்வாய்வானது முகாமைத்துவ திறன் விருத்திக்காக ஆசிரியர் கூட்டங்கள், ஆசிரியர் கல்வித் தகுதி தொழிற்தகுதிகளை விருத்திசெய்தல், பாடசாலையின் உள்ளகமேற்பார்வை, சமூ கத் தொடர்பாடல் நடவடிக்கைகள் என்பன மேலும் வலுப்படுத்தப்படுதல் வேண்டும்.

ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்து வத்தின் முக்கியத்துவம்

காலைக்கூட்டம் உடற்பயிற்சியில் மாணவர் களை பங்குபற்றச் செய்தல், அழகிய சூழலுள்ள வகுப்பறையைப் பேணல், வகுப் பறையின் அன்றாட நடவடிக் கைகளின் முகாமைத்துவம், வகுப்பறைநேரசூசி, ஆவணங்களின் பொறுப்பு, பாடசாலைக் கலாசாரம், வகுப்பறைக்குவரும் பாடப் பொறுப்பாசிரியர்களின் பணிகளுக்கு உதவுதல். வகுப்பறை நிருவாகச் சட்டதிட்ட ங்கள் தொடர்பாக தரஇணைப்பாளர்கள், பிரதிதலைவர்களினூடாக இணைப்பாக்கஞ் செய்தல், வகுப்பறைத்தலைவர் பாடத்தலை வரின் பணிகளை முறையாக முகாமை செய்தல், மாணவரின் முழுமையான விருத்திக்காக பெற்றோரின் ஒத்துழைப் பைப் பெறுதல், குறித்த வருடத்தில் மாணவரின் முன்னேற்றத்தை மதிப்பிடல் வேண்டும்.

சமநிலைத்தன்மையையும், தன்னலமற்ற தன்மையும் காணப்படும் உயர் மட்ட நேர் மைத் தன்மை கொண்டிருக்க வேண்டும். மாணவர்களும் சேர்ந்து செயற்படும் முகாமைத்துவத் திறன் காணப்படும். ஆசிரி யர்கள் வினைத்திறனுடைய முகாமையாளர் களாகச் செயற்பட்டால் பின்வரும் விடயங் களில் வெற்றி காணலாம். மாணவர்கள் கற்றலில் இடர்படும். இடங்களை அறிந்து கொள்ளல், மாணவர்களினால் தேர்ச்சி மட்டத்தை எட்டக்கூடிய நிலைமைகளை உருவாக்குதல், மாணவர்களின் கற்றலுக் குத் தடையாகவுள்ள காரணிகள் தொடர் பாக அறிந்துகொள்ளல், மாணவர்களின் தனியாள் வேறுபாட்டினை இனங்கண்டு கொள்ளல், மாணவர்களின் கற்றலில் ஊக்கு விப்புக்களை ஏற்படுத்தல், மாணவர்களின் ஒழுக்க நடவடிக்கைகளில் எத்தகைய மாற்றங்களைச் செய்யவேண்டும் என்பதை விளங்கிக் கொள்ளல், பிள்ளைகளின் கற்றல் தொடர்பாக குடும்பகாரணிப் பண்பு களை விளங்கிக் கொள்ளல்.

பாடசாலை நிர்வாகத்தின் பணிகளை இலகு வாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளல் ஆசிரியர்களின் கற்பித்தல் நுட்பங்கள் தொடர்பான விடயங்களை விளங்கிக் கொள்ளவும் ஆசிரியர்-ஆசிரியர், ஆசிரியர்- மாணவர் இடைவினையுறவுகளை அதிகரி க்கச் செய்தல் இவைகளினூடாக ஆசிரி யரின் முகாமைத்துவத் திறனானது வலுவ டையும். கல்வி அமைச்சு (1972). கல்வியின் புதிய பாதை் கலைத்திட்ட சீர்திருத்த அறிக்கை கொழும்பு: கல்வி அமைச்சு.

பரிந்துரை (கண்டறிதல்களும் முன்மொழியப்படும் ஆலோசனைகளும்)

முகாமைத்துவதிறன் விருத்தி நிலையை ஏற்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர் நோக்கிய இடர்கள், பிரச்சினைகள் தொடர்பாக வினாக்கொத்து மற்றும் குவிமையக் கலந்துரையாடல், நேர் காணலில் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார். யுத்த இடப் பெயர்வு மீள் குடியேற்றத்துடன் இணைந்த தான செயற்பாடுகள் தூர தேசங்களிலிருந்து பாடசாலைக்கு வருகைதருதல்,அதனுடன் தொடர்புடைய மறைமுகமான தாக்கங்கள் கல்வியமைப்பில் பாடசாலை முகாமைத் துவதிறன் விருத்திநிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வளப் போதாமை, பொருத்தமான மேற்பார்வையாளர்களின் வழிகாட்டல்கள் போதாமை, கருத்தரங்குகளில் பங்கு பற்றாமை போன்றன முகாமைத்துவ திறன் விருத்தியை ஏற்படுத்ததடையாக உள்ளன எனப் பெரும்பாலான ஆசிரியர்கள் தெரிவித்தனர். தொடர்ந்து யுத்தம் முடிந்து மீள்குடியேற்ற நிலைமைகள் மாற்றங்களுக்கு உள்ளாகினாலும் தமக்கு இன்னும் தேவைகள் பூரணப்படுத்தப்படாமலே உள்ளமையும் சுட்டிக்காட்டினார்கள். இவ்வாறன ஆய்வுகள் நிலையூடாக ஆசிரியர்கள் இனிவரும் காலங்களில் இவ்வாய்வு தொடர்பாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் முகாமைத்துவம் தொடர்பான பூரணபயிற்சிகளை வழங்கி அவற்றின் மேம்பாட்டுக்கான அணுகு முறைகள், உபாயங்கள் திட்டமிடல், என்பவற்றின் அவர்களின் திறன்களை விருத்தி செய்து அவர்களுக்கான வழிகாட்டி நூல்கள், பாட நூல்கள், துணை நூல்கள் போன்றவற்றை வழங்க வேண்டும். அத்தோடு ஆசிரியர்கள் சுதந்திரமாக செயலாற்ற வேண்டியிருக்கின்றது. வகுப்பறைக் குள்ளும், அதற்குவெளியேயும் மாணவர்களின் அறிவு, திறனின் மனப்பாங்குகள், அடங்கியவிருத்திச் செயற்பாடுகளுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களேயாவர். மாணவர்கள் எதிர் கால வாழ்வை முகாமை செய்ய வழிநடத்தும் முக்கிய நபரும் ஆசிரியர்களேயாவர். இந் நோக்கங்களை வழங்க ஆசிரியர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளை தொடருறுகல்வி விருத்தி நோக்கி வழங்க வேண்டும். விளையாட்டுச் செயற்பாடுகள், கற்றல் கற்பித்தல், சுற்றுலாக்கள் செல்லுதல், கலந்துரையாடல்கள் மேற்கொள்ளுதல் வெளிநாட்டு புலமைப் பரிசில்களை வழங்குதல் இடைநிலைக் கல்வித்துறைசார் தேர்ச்சிப் பட்டப் படிப்புக்கள் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலையிலுள்ள இடைநிலை வகுப்புக் களை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர்களான ஆசிரிய ஆலோசகர்கள், வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள், மாகாணகல்வித்திணைக்கள அதிகாரிகள், தேசியகல்வி, நிறுவகபரீட்சைத் திணைக்கள அதிகாரிகள், கல்வி வெளியீட்டுத் திணைக்களஅதிகாரிகள் இதில் அடங்குவார். இவர்களது உதவிகள், வழிகாட்டல்கள், பயிற்சிப் பட்டறைகள் வெளியீடுகள் அனைத்தும் பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கு மிக அவசியத் தேவையாகும். இவர்கள் தமக்குப் பூரண ஒத்துழைப்பை நல்கவில்லை என்று இவ் ஆய்வில் பெருமளவான ஆசிரியர்கள் குற்றம் சுமத்தியிருந்தார்கள். வினாக் கொத்து மூலமும் குவிமையக் கலந்துரை யாடல்கள் மூலமாகப் பெற்றதரவுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

ஆசிரிய ஆலோசகர்கள் மேற்பார்வையாளர்கள் தமக்குத் தேவையான பல விடயங்களைத் தெளிவுபடுத்தவில்லை,

ஆர்வம்காட்டவில்லை. எனவும் வேத னையுடன் தெரிவித்தனர். பாடசாலை அதிபர்கள் மேற்பார்வை அதிகாரிகள் தமக்குத் தேவையான ஆசிரியவளத்தை, ஏனைய பௌதிகவளங்களைப் பொருத்த மாகத் தரவில்லை, எனவும் பாடசாலை களுக்கிடையே பாகுபாடுகாட்டுதல், தமது செல்வாக்கை நிலைநிறுத்தல், வகுப்புக் களைப் பொருட்படுத்தாமை, உரிய காலத்தில் ஆசிரியர் அறிவுரைப்பு வழி காட்டிகளை வழங்காமை, போதுமான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாமை, கஸ்ட பிரதேச தூரவுள்ள பாதிக்கப்படட பாடசா லைகளைக் கவனத்திற் கொள்ளாமல், வளங்கள் உள்ள பாடசாலைகளுக்கே தொடர்ச்சியாக வளங்களை வழங்குதல் போன்ற மிகப் பெரிய குற்றங்களை அவர்கள் மீது சுமத்தினர். இக் குற்றங் களைச் சுமத்தியவர்களில் பாடசாலை அபிவிருத்திச் சபைகள், பெற்றோர், பொது மக்களும் அடங்குகின்றனர். எனவே மேற் பார்வை அதிகாரிகள் தத்தமது பொறுப்புக் களை மிகநேர்த்தியாக செய்ய வேண்டி உள்ளது.

இவ்வாய்வில் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களைக் குற்றம் சுமத்தும் அதே வேளை மேற்பார்வை அதிகாரிகளை அதிபர் ஆசிரியரகள் குற்றம் சுமத்தும் நிலையும் காணப்படுகின்றது. பொருத்தமான நிலை யை ஏற்படுத்த முகாமைத்துவ ரீதியான தந்திரோபாய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியுள்ளமையை இவ்வாய்வு எடுத்து இயம்புகின்றது.

முகாமைத்துவ திறன்களை முறையாக நடைமுறைப்படுத்தவும், கல்வி வாய்ப்புக் களைச் சமமாகவும் மற்றும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் பண்புசார் கல்வி வழங்குவதற்கேற்றவாறும், பாடசாலை முறைமையை நியாயப்படுத்துவதற்கும் வலுவான ஒரு தேவை உள்ளது. முகாமைத்துவ திறன் விருத்தி நிலையை ஏற்படுத்துவதற்காக ஆசிரியர்களின் தேவை கருதி பயிற்சித் திட்டங்களை புதிதாக உருவாக்க வேண்டியுள்ளது. இவர்களை சுய விருப்பத்துடன் தமது அறிவினை இனம் கண்டு புதிய விடயங்களை மற்றும் தற்போதைய முன்னேற்றங்களை அல்லது பிரச்சினைகளை ஆய்வுக்குட்படுத்தி வளம், மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டும். முகாமைத்துவுதிறன் விருத்திக் கான செயல் நிலை ஆய்வுகளில் பங்கு கொள்ள வேண்டும்.

பொதுவாக இவ்வாய்வினூடாக சகலரும் பாடசாலையுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருக்கவேண்டும். முகாமைத்துவத் துடன் சரியாக செயற்படும் போது மாணவர்கள் முறையாக வளர்க்கப்படுவார் கள். கண்ணியமாக வளரும் உரிமை வழங்கப்படும். வன்முறைகள் இல்லா தொழிக்கப்படும். கல்விபெறும் உரிமை வலுப்பெறும். பெற்றோர்கள், பிள்ளைகள் தொடர்பாக அக்கறையுடன் செயற்பட வேண்டும். பிள்ளைகளிற்கு தொழில் வழிகாட்டல் வழங்கவேண்டும் முகாமைத்து வதிறன் விருத்தியூடாக நற்பழக்க வழக்கங்களுடன் கூடிய நற்பிரஜைகளை உருவாக்கவேண்டும். முகாமைத்துவ திறன் விருத்தி ஆய்வு முடிவுப்படி குறைவாக உள்ளதால் ஆசிரியர்களை செயலமர்வு களில் பங்குபெறச்செய்தல் வேண்டும். சுயமாக இயங்கும் தன்மையையும் தற் துணி வையும் வளர்க்கவேண்டும். கொள்கைத் திட்டங்களை வினைத்திறனுடன் அமுலாக்க வேண்டும். அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். வளஆளணியினரை சரியாகப் பங்கிடவேண்டும்.

பாடசாலை உயிர்த்துடிப்புடன் செயலாற்றத் தக்க வகையில் ஆய்வுகளை மேற் கொள்வது சிறந்தது. நேர்மையுடனும் கண்ணியத்துடனும் விசுவாசத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றவேண்டும். கட்டாயக்கல்வி, கல்விவலுவூட்டல், செயற் பாடுகளைச் செய்வதுசிறந்ததாகும். மேற் பார்வையாளர்களின் பொருத்தமான வழி காட்டல்கள் அவசியம். கலைத்திட்ட சாதனங்கள் பாடநூல்கள் ஆசிரியரின் அறிவுரைப்படி வழிகாட்டல்கள் சரியாக பூர்த்தி செய்யப்படவேண்டும். இவை சரி யாக நடைமுறைப்படுத்தப்பட்டால் பாடசா லைகளில் வகுப்பறை முகாமைத்துவதிறன் விருத்தி நிலையை விருத்தி செய்யலாம் என்பதனை இவ் ஆய்வு நியாயப்படுத்து கின்றது. பலவீனங்கள் சரியாக இனங் காணப்பட்டு தீர்வுகள் உடனடியாக அமுலாக்கப்பட வேண்டும். பொருத்தமான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். சூழ்நிலைகளை சாதகமாக பயன்படுத்தப் பட வேண்டும். அப்போது தான் முகாமைத் துவ திறனை விருத்தி செய்யமுடியும்.

உசாத்துணைகள்

அருள்மொழி, செ. (2008). *கல்வி ஆய்வு முறைகள்*. மட்டக்களப்பு: எவக்கிறீன் பதிப்பகம்.

இலக்குமணன். M. S. (1977). *அறிவியல் அறிமுகம்.* சென்னை: மீனாட்சி புத்தக நிலையம்.

கல்வியின் புதிய பாதை கலைத்திட்ட சீர்திருத்த அறிக்கை. (1972). கொழும்பு: கல்வி அமைச்சு.

கல்வியின் மூலதத்துவங்கள் கல்வியற் கல்லூரி வழிகாட்டல் கைநூல். (2004). கொழும்பு: கல்வி அமைச்சு.

வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம் பாட்டு வேலைத்திட்டம் தொடர்பான வழிகாட்டல் கைந்நூல். (2018). கொழும்பு கல்வி அமைச்சு.

Cohen.L, Manion.L and Morrison. (2010). *Research Methods in Educations.* London: Routlede.

UNICEF and NIE. (2003). *Rapid Need Assessment Survey: Education of children in conflict affected Areas of Sri Lanka*.